P.R.NO: 10..

நாள்: 05.12.2017

ந.க. ஔ3/39724/2017

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
திருநெல்வேலி,
நாள்.5.12.2017

## பத்திரிக்கை செய்தி

தேசிய வாக்காளர் தினத்தின் உறுதிமொழியான "Empowering Youth and Future Voters" என்ற வாசகத்தை செயல்படுத்தும் விதமாக இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி, எதிர்கால வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு படிக்கும் மாவண-மாணவிகளுக்கு வினாடி-வினா சட்டமன்ற தொகுதிவாரியாக கடந்த 15.11.2017 அன்று அந்தந்த பள்ளிகளில் வைத்து நடைபெற்றது. அதில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேல் மேற்பட்ட மாணவ/மாணவிகள் கலந்து கொண்டனர். வினாடி-வினா போட்டியில் வாக்காளராக பதிவு செய்வது குறித்தும், இந்திய தேர்தல் ஆணையம் குறித்தும், வாக்களிப்பது தொடர்பான உரிமை குறித்தும், தேர்தல் அலுவலர்கள் குறித்தும், தேசிய வாக்காளர் தினம் குறித்தும், பதிலளிக்கும் வகையில் கேள்வித்தாள்கள் வடிவமைக்கப்பட்டு இருந்தன. ஒரு பள்ளியில் இரு மாணவர்கள் என்ற வீதத்தில் முதல் இடம் பிடித்த 82 பள்ளிகளை சார்ந்த மாணவ/மாணவர்கள் (164) மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிற்கு தேர்வாகி இருந்தனர்.

முதற்சுற்றில் வெற்றி பெற்ற மேற்படி 82 பள்ளிகளை சார்ந்த மாணவ/மாணவியர்களுக்கு இரண்டாம் கட்டமாக மாவட்ட அளவிலான போட்டி இன்று (5.12.2017) காலை 11.00 மணியளவில் திருநெல்வேலி டவுண் சாப்டர் மேல்நிலை பள்ளியில் வைத்து திருநெல்வேலி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி நடைபெற்றது. இப்போட்டியில் முதல் இடத்தினை தென்காசி சட்டமன்ற தொகுதி மற்றும் தென்காசி வட்டம், சுந்தரபாண்டியபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியை சார்ந்த மாணவி செல்வி C. சங்கீதா (XII STD) மற்றும் செல்வன்:S.மனோஜ்குமார் (X STD) ஆகியோர் அடங்கிய அணி முதல் இடம் பெற்று வெற்றி பெற்றது. அடுத்த கட்டமாக மாநில அளவில் சென்னையில் நடைபெறும் போட்டி தேர்விற்கு அழைத்து செல்லப்படுவார்கள். அதில் வெற்றி பெறுபவர்கள் தேசிய அளவில் புதுதில்லியில் நடைபெறும் போட்டி தேர்விற்கு அழைத்து செல்லப்படுவார்கள். இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி, மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ளும் மேற்படி மாணவ/மாணவியர்கள் தங்களது திறமைகளை சிறந்தமுறையில் வெளிபடுத்தி வெற்றி பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாவட்ட அளவிலான நடைபெற்ற மேற்படி போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பாக நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேற்படி நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.மோ.விஜயகுமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு.S.அழகுராஜன், தனிவட்டாட்சியர் (தேர்தல்), திரு.க.சுகுமார், மற்றும் துணைவட்டாட்சியர்கள் (தேர்தல்) ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

**ஒம்/-சந்தீப் நந்தூரி,**
**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**திருநெல்வேலி.**

வெளியீடு

/உண்மை நகல்/

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

5/12/17